[1979 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : (அ) ஆம்,

(ஆ) இல்லை, கைவார் கமிட்டி அறிக்கையின் நகல்கள் சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன,

திரு. க. மருதாசலம் : கைவார் தலைமையில் அமைக்கப் பட்ட குழு எந்த ஆண்டில் அமைக்கப்பட்டது? அந்தக் குழுவில் யார் யார் இருக்கிறார்கள்? அதனுடைய ரிப்போர்ட்டை ஏன் அரசுக்குத் தரவில்லை,

மாண்புமிகு திரு. எஸ்.டி.சோமசுந்தரம் : கைவார் கமிட்டி அறிக்கை தரப்பட்டு விட்டது. அதிலே எஸ்.ஆர். கெய்வார். சேர்மன் உறுப்பினர்களாக எஸ்.பி. சீனிவாசன். ஐ.ஏ.எஸ்., என், கிருஷ்ணசாமி. ஐ. பி. எஸ்,. ஏ. ஆர். தாமோதரன், கே. மாயாண்டி ஆகியோர் இருந்தனர்,

தூத்துக்குடி கிடங்கில் சங்குகள் இருப்பு,

*வினா எண். 788—திரு. ந. தனசேகரன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தூத்துக்குடி அரசு சங்கு கிடங்கில் எவ்வளவு சங்குகள் விற்கப்படாமல் தேங்கிக் கிடக்கிறது?

(ஆ) நடப்பாண்டில் இதுவரை விற்கப்பட்ட சங்குகளின் விலை மதிப்பு எவ்வளவு?

(இ) விற்கப்படாத சங்குகளை விற்பனை செய்ய அரசு எடுத்துள்ள முயற்சி யாது?

மாண்புமிகு திரு. க. உஉறா. எட்மண்ட் :

(அ) தூத்துக்குடி அரசு சங்கு கிடங்கில். 31-3-1978-ம் தேதியன்று 19,93,303 சங்குகள் தேங்கிக் கிடந்தன,

(ஆ) நடப்பாண்டில். 28-2-1979 முடிய விற்கப்பட்ட சங்குகள் மொத்தம் 13,23,494. அவைகளின் மதிப்பு ரூ. 24,58,124.77,

(இ) தூத்துக்குடி ஸ்ரீமுருகன் சங்குத் தொழிற்சாலைக்கு மாதந்தோறும் 15,000 சங்குகள் விற்பனை செய்யப்படுகிறது. இந்து சமய ஆலயங்களுக்கு அவ்வப்போது அவைகளின் தேவை களின் பேரில் சங்குகள் விற்பனை செய்யப்படுகிறது. தவிர, பொது ஏலத்தில் விற்க, தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம்

1979 ஏப்ரல் 24]

செய்தும், முக்கிய சங்கு வியாபாரிகளுக்கு நேரடியாக தகவல்கள் அளித்தும் சங்குகளை விற்பனை செய்ய முயற்சிகள் செய்யப் படுகிறது,

திரு. ந. தனசேகரன் : விற்கப்பட்ட சங்குகள் போக மீத முள்ள சங்குகள் தரமாக இருக்கின்றனவா? தரமாக இல்லாத காரணத்தால்தான் வியாபாரிகள் வரவில்லை என்று சொல்லப் படுகிறது. அப்படி இருக்கும் காரணத்தால் 'ஆக்ஷன் சேல்' என்ற முறையைப் பயன்படுத்தி பழைய சங்குகளைக் கழித்து விட்டு இப்போது பிடிக்கும் புதிய சங்குகள் தரமாக இருக்கும் காரணத்தால் அதை இருப்பில் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : விற்பனை செய் யும்போது தரம் பிரித்துத்தான் விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு தரத்திற்கும் ஏற்ப தனிப்பட்ட முறையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆகவே, வாங்குபவர்கள் தரத் தைப் பார்த்துத்தான் வாங்குகிறார்கள்.

திரு. செ. சிவசாமி : தூத்துக்குடி கொடவுனில் இருந்து பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சங்குகள் கடத்தப்பட்டு புதிதாக அந்த இடத்தில் நல்ல சங்குகளுக்குப் பதிலாக சொத் தை ஓட்டைச் சங்குகளை வைத்திருப்பதாகக் கேள்வி. உண்மை நிலைமை என்ன?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விப்படுகிறோம் என்று சொல்வதைவிட தவறு நடந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டு வார்களானால் நான் பலமுறை இந்த மன்றத்திலே சொல்லியிருக் கிறேன். தவறு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். கேள்விப்படுகிறோம் என்று சொல்வதை வைத்துக் கொண்டு எப்படி நடவடிக்கை எடுக்கமுடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள்.

திரு. ந. தனசேகரன் : தலைவர் அவர்களே, மீதம் இருக்கிற சங்குகளைக் கழிப்பதற்காக நடவடிக்கை எடுத்து அரசு ஏலம் விடுமா என்று நான் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. அப்படிக் கழிப்பதன் மூல மாகத்தான் இப்போதுள்ள உருப்படியான சங்குகளை இருப்பில் வைக்க முடியும். இப்போது பிடிக்கின்ற சங்குகளை கம்ப்ரஸர்கள் வைத்துப் பிடிக்கின்ற முறையை அரசு கொண்டுவர ஆவன செய்யுமா? சங்கு தொழிற்சாலையை அரசின் தரப்பிலே ஏற்படுத்த அரசு முயற்சி எடுக்குமா ?

[1979 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, கம்ப்ரஸர்களை வைத்து சங்கு குளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய முடியுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். அதைப்பற்றி அரசு இப்போது ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. தரத்தைப் பற்றிப் பேசினார்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். ஒவ்வொரு தரத்திற்கும் ஒவ்வொரு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. சில குறைந்த தரம் உள்ள சங்குகளைக் கோடவுன்களில் தேக்கி வைத்துவிட்டு நல்ல சங்குகளை விற்பனை செய்வது என்றால் குறைந்த தரம் உள்ள சங்குகளை-சங்கு குளிப்பவர்களின் நலன் கருதி வாங்குகிற காரணத்தினாலே துறைக்குப் பெருத்த நட்டம் ஏற்படலாம்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இப்போது பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சங்குகள் தமிழ்நாட்டில் ஒரு சில வியாபாரிகளிடம் மட்டுமே விற்பனை செய்யப்படுவதாக அறிகிறேன். கீழை நாடுகளிலே அரசாங்கம் ஒரு தனி கம்பெனியை உருவாக்கி சங்கு வாங்குகிறார்கள்—அங்கே இதற்கு கிராக்கி அதிகமாக இருக்கின்ற காரணத்தால்—விற்பனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? இரண்டாவதாக, இங்கே கைப்பற்றப்பட்ட வலம்புரி சங்கின் விலை என்ன? அது எங்கே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, இங்கே கைப்பற்றப்பட்ட அந்த வலம்புரிச் சங்கு மிகப் பத்திரமாக இருக்கிறது. அதைக்கூட நம்முடைய அமைச்சரவை கூட்டம் நடைபெறுகின்ற மண்டபத்திலே வைக்கலாமா என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டு இருக்கிறோம். ஆகவே அது பத்திரமாகத்தான் இருக்கிறது. சில கம்பெனிகளுக்கு மட்டும் தான் விற்பனை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். யாருக்கு விற்றாலும் டென்டர்கேட்டுத்தான் விற்பனை செய்யப்படுகிறது, அரேபியா போன்ற நாடுகளுக்கு ஏன் விற்கக் கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். மேற்கு வங்காளத்திலே இதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது. அவர்களுக்குத் தேவையான சங்குகளையே நம்மால் சில நேரங்களிலே கொடுக்க முடியவில்லை.

உணவுப் பொருள்களின் விலை.

*வினா எண். 789—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திடீரென்று உணவுப் பொருள்களின் விலைவாசிகள் உயர்ந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?